Publication: Namadhu Murasu	Pg No: 4
Edition – Print	Date – 27.09.2021

Four high-impact social entrepreneurs nominated as finalists of the 'Social Entrepreneur of The Year' Award - India 2021
By Schwab Foundation & Jubilant Bhartia Foundation

சமூக தொழில்முனைவோர் விருது வெற்றியாளர் அறிவிப்பு எப்போது?

சென்னை, செப்.21- உலக வர்த்தக மன்றத்தின் கிளை அமைப்பான ஸ்வாப் பவுண்டேஷன் பார் சோசியல் ஏண்ட்ர்ப்ரெனர்ஷிப் மற்றும் ஜூபிலன்ட் பார்சியா அறக்கட்டளை, ஜூபிலன்ட் பார்சியா குழுமத்தின் ஒரு லாப நோக்கமற்ற அமைப்புடன் இணைந்து 12-வது இவ்வாண்டின் சமூக தொழில்முனைவோர் (SEOY) விருது இந்தியா 2021 விருதிற்கான இறுதிப் போட்டியாளர்களை அறிவித்தது. (SEOY) விருது இந்தியா 2021 விருதிற்காக இறுதிப் போட்டியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாற்றல் மிக்க சமூகத் தொழில் முனைவோர்கள் பின்வருமாறு: 1. அபர்ணா ஹெக்டே, ஆர்ம்மன் www.armman.org , 2. சீமா பிரேம், பியா குளோபல் www.fiaglobal.com , 3. பிரன்ஷு சிங்கால், கரோ சாம்பவ் www.karosambhav.com , 4. சுச்சின் பஜாஜ், உஜாலா சிக்னஸ் www.ujalacygnus.com . பல்வேறு துறைகள் மற்றும் பின்னணியைச் சேர்ந்த தொழிற்துறை ஜாம்பவான்கள் மற்றும் தனித்துவம் கொண்ட பிரபலங்கள் அடங்கிய ஒரு சிறந்தநடுவர்குழு,விருதிற்கான இறுதி வெற்றியாளரைத் தேர்ந்தெடுக்கும். 'சமூக தொழில் முனைவோர்' விருது இந்தியா 2021-க்கான வெற்றியாளர் அக்டோபர் 7, 2021 வியாழக்கிழமை ஒரு மெய்நிகர் விழாவில் அறிவிக்கப்படுவார். இந்த மெய்நிகர் விருது வழங்கும் விழாவில் உலகம் முழுவதிலுமிருந்து பல்வேறு முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்று இந்த உத்வேகமான நபர்களின் முன்மாதிரியான பங்களிப்பைப் பாராட்டிக் கொண்டாடுவார்கள். SEOY விருது இந்தியா, சமூக தொழில்முனைவோருக்கான மிகவும் மதிப்புமிக்க விருதுகளில் ஒன்றாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. இந்த ஆண்டு இந்த விருது தனது 12-வது ஆண்டைக் கொண்டாடுகிறது.

2010ஆம் ஆண்டில், சமூக தொழில்முனைவிற்கான ஸ்வாப் பவுண்டேஷன் பார் சோசியல் ஏண்ட்ர்ப்ரெனர்ஷிப் மற்றும் ஜூபிலன்ட் பார்சியா அறக்கட்டளை ஒன்றிணைந்தது இந்தியாவில் 'இவ்வாண்டின் சமூக தொழில் முனைவோர் (SEOY) இந்தியா விருது' மூலம் சமூகப் புத்தாக்கத்தைப் பெருமைப்படுத்த முன்வந்தது.